சார்பு நீதிமன்றம், சங்ககரி

MCOP.No.278/2019

ம.சா.2

நாள். 07.12.2023.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அண்ணாமலை | மதம்: | இந்து |
| தகப்பனார் /கணவர் பெயர்: | --- | ஜாதி: | --- |
| கிராமம்: | --- | வேலை: | --- |
| வட்டம்: | --- | வயது: | --- |

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இம்மனுவில் 3 ம் தரப்பினர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சி சம்மன் வரவில்லை. மனுதாரர் கேட்டுகொண்டதால் சாட்சி சொல்ல வந்தேன். விபத்து நடந்த இடம் சாலை வளைவு பகுதி என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தின் அருகில் தான் 1 ம் மனுதாரர் வீடு உள்ளது என்றால் சரிதான். வளைவில் இருந்து சிறிது தூரத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். வளைவில் பேருந்து மெதுவாக சென்ற போது அருகில் வீடு இருந்ததால் இறந்து போன சாந்தி பேருந்தில் இருந்து இறங்கிய போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சாந்தியின் கவனகுறைவு தான் விபத்திற்கு முழுகாரணம் என்றால் சரியல்ல. பேருந்து நடத்துநரின் அனுமதி இல்லாமல் சாந்தி பேருந்தில் இருந்து இறங்கியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அரசு பேருந்து ஓட்டுநரின் கவனகுறைவு விபத்திற்கு காரணம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் சொல்லி கொடுத்து உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-அண்ணாமலை

Sd/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.